# மே – 02 - செவ்வாய்

## புனித அத்தனாசியஸ்

**“உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்”. திபா - 31:3**

**முதல் வாசகம்: திருத்தூதர் பணி 7 : 51 --- 8 : 1**

அந்நாட்களில் இஸ்தோவான் மக்களையும் மூப்பர்களையும் மறைநூல் அறிஞர்களையும் பார்த்துக் கூறியது: திமிர் பிடித்தவர்களே, இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும் ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே, உங்களுடைய மூதாதையரைப் போல நீங்களும் தூய ஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள். எந்த இறைவாக்கினரைத்தான் உங்கள் மூதாதையர் துன்புறுத்தாமலிருந்தார்கள்? நேர்மையாளருடைய வருகையை முன்னறிவித்தோரையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்போது நீங்கள் இயேசுவைக் காட்டிக்கொடுத்துக் கொன்றுவிட்டீர்கள். கடவுளின் தூதர்கள் வழியாய்த் தரப்பட்ட திருச்சட்டத்தை நீங்கள் பெற்றிருந்தும் அதனைக் கடைப்பிடிக்க வில்லை” இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள். அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு, ”இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்” என்று கூறினார். ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக்கொண்டு பெருங்கூச்சலிட்டு ஒருமிக்க அவர்மேல் பாய்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டுபோய் அவர்மேல் கல்லெறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெறிந்தபோது அவர், ”ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று வேண்டிக் கொண்டார். பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில், ”ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர்விட்டார். ஸ்தேவானைக் கொலை செய்வதற்குச் சவுலும் உடன்பட்டிருந்தார். அந்த நாள்களில் எருசலேம் திருச்சபை பெரும் இன்னலுக்குள்ளாகியது. திருத்தூதர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியாவின் நாட்டுப் புறமெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போயினர்.

**பதில்பாடல் :** உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்

**நற்செய்தி: யோவான் 6 : 30 - 35**

அக்காலத்தில் மக்கள் இயேசுவிடம், ”நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? அதற்காக என்ன அரும் செயல் செய்கிறீர்? எங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்டனரே! ”அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளினார்” என்று மறைநூலிலும் எழுதப்பட்டுள்ளது அல்லவா!” என்றனர். இயேசு அவர்களிடம், ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல் வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே. கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது” என்றார். அவர்கள், ”ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும் ” என்று கேட்டுக்கொண்டார்கள். இயேசு அவர்களிடம், ”வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது” என்றார்.

**தியானம்:** இன்றைய இரண்டு வாசகங்களும் கிறிஸ்து இயேசுவையும் அவரது போதனைகளையும் ஏற்க மறுத்த யூத மக்களது செயற்பாட்டினைத் தெளிவுபடுத்துகின்றன என மிக எளிதாகக் கூறிவிடலாம். ஆனால் 2017 ஆண்டுகள் கடந்து வாழுகின்ற நாம் இன்னமும் அதே மனப்பாங்கோடேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதனை மறுப்போமா?. எமது கத்தோலிக்க விசுவாசப் பயணத்தில் நாம் செல்ல வேண்டிய இலக்கை நோக்கி, எமக்கு **“வாழ்வு தரும் உணவை”** நோக்கி நாம் சிந்திப்பதுண்டா என்பதனை மீளாய்வு செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். எவ்வாறாயினும் கிறிஸ்துவே **“வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது”** (யோவான் 6:35) எனத்தன்னையே எமக்காக உடைத்துக் கொடுத்து அவரது நற்செய்திக்குச் சாட்சி கூறும் அடையாளச் சின்னமாக வாழுமாறு அழைப்பு விடுக்கின்றார். இவ்வாறு கிறிஸ்துவை ஏற்று வாழ்ந்ததனாலேயே புனித ஸ்தோவான் இறுதிநாளில் **“ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்”** என்று வேண்டுதல் செய்யும் அளவிற்கு துணிந்து நின்று கிறிஸ்துவின் போதனையை விசுவசித்து ஏற்று இவ்வுலகப் போதனையை எதிர்த்து நின்று புனிதரானார். நாமும் ஸ்தோவானைப் போல கிறிஸ்துவை எமது சொந்த இரட்சகர் என நம்பி விசுவாச வாழ்வு வாழ்வோமாயின் இறுதி நாளில் அவர் வரும் வேளையில் எமக்குப் பசியோ தாகமோ ஏற்படாதென நற்செய்தி தெரிவித்தாலும் நாம் அப்படிப்பட்ட வாழ்வு வாழுகிறோமா? எனவே, அவ்விதமான வாழ்வில் நாம் நிலைத்திருக்க அன்னை மரியாவின் வணக்க மாதமான இந்த மாதத்தில் உறுதி எடுப்போம்.